<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 47/2023

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ம் நாள் இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனியப்பன் | கிராமம் | : கணக்கம்பாளையம் | |
| வயது | : | தாலூக்கா | : திருப்பூர் வடக்கு | |
| நாள் | : 27-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் | |

<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 மற்றும் 11ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா ஏ செட்யூல் அமைந்துள்ள சொத்து காலை எண் 44/2 ஏ, 45/3 பி, 45/3 ஈ நாராயணமூர்த்திக்கு பாத்தியப்பட்டது, மேற்படி பூமிகளுக்கு காலை எண் 46/1,2,3 காலைகளின் வடகோட்டில் கிழமேலாக இருக்கும் தடத்தில் நாராயணமூர்த்தியும் அவரது குடும்பத்தினரும் கடந்த 1938ம் ஆண்டு முதல் தடமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. நாராயண மூர்த்திக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும் காலை எண் 46/1,2,3 காலைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2. காலை எண் 46/1,2,3-ல் நாராயணமூர்த்தி குடும்பத்தினருக்கு தடபாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு க.ச.எண்.46 ல் சொத்து இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.46 ல் 2ம் வாதியும் அவரது குடும்பத்தினரும் அத்துமீறி நுழைந்துவிட்டு, பிரதிவாதி இடையூறு செய்ததாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு பொய்யாக தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிகள் மட்டும் தான் க.ச.எண்.46/1,2,3 ல் தடபாத்தியம் உள்ளது என்றாலும் அதனால் தான் பட்டாவில் பிரதிவாதிகள் பெயருள்ளது என்றாலும் சரியல்ல. வாதி

தாக்கல் செய்த ஆவணத்தில் க.ச.எண் 46 குறித்து எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல. நாராயணமூர்த்திக்கு நான் வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.02.27 15:40:47 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.